# சமுதாய புறச்சூழல

**முனைவர் இரா. கலைச்செல்வி,**
**இணைப்பேராசிரியர்,**
**செங்கமலத்தாயார் கல்வி அறக்கட்டளை,**
**மகளிர் கல்லூரி, சுந்தரக்கோட்டை -614016.**
E.mail:kalaigowriprasath@gmail.com

**40**

**கருதுகோள் :**

சமுதாய நோக்கம் உண்ண உணவு, உடுக்க உடை, நல்ல வீடு ,இதுவே வாழ்வின் அடிப்படை தேவை. சமுதாய முன்னேற்றம் என்பது நிலம் , உழைப்பு , மூலதனம் , அறிவியல், தொழில் நுட்பம் , அறிவாற்றல் ,செயல் திறன் ஆகியவை ஒருங்கிணைந்து வருவது. இந்த மேம்பாட்டிற்கு கல்வி அவசியமாகிறது.சமூகம் தேடும் மனிதராக வாழ வேண்டும் . தன்னம்பிக்கை, ஒழுக்கம் ,கடின உழைப்பு ,ஊக்கம் மிகுந்தர்களாக மக்கள் இருக்க வேண்டும்.

இன்றைய சமூதாயம் பெரிய வீடு ,மகிழுந்து ,இரு சக்கர வாகனம் , கைபேசி, நல்ல உணவு என்ற சிந்தனையில் சிக்கி தவிக்கின்றனர் .எதார்த்த உலகில் வாழத் தயார் நிலையில் சமுதாயம் இல்லை . இந்த சூழலை மாற்ற வேண்டும் .சமுதாயத்தின் போலித்தனமான எண்ணங்களால் ஏற்படும் புறச்சூழல் நெருக்கடிகளை தவிர்ப்பதே நோக்கமாகும்

**முன்னுரை:-**

சமீப காலத்தில் பூமியில் சூழ்நிலை குறிப்பிடத்தக்க அளவு சீர்கேடு அடைந்துள்ளது. மனிதனின் பாதகமான எண்ணங்களே இவற்றுக்கு காரணம். ஆக்கபூர்வமான எண்ணம் இல்லை, உழைப்பு இல்லை, அறிவை விரிவு செய் அகண்டமாக்கு, விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை என்று பாரதிதாசனின் கூற்றினை ஆராய்ந்து பார்க்க வேண்டும்

அறிவை விரிவு செய்- அதுவே அறிவியல் வளர்ச்சி அறிவை விரிவு செய்ய மனிதன் ஆடம்பரத்தை நோக்கியே பயணிக்கிறான்.

**இருப்பிடம்:-**

இருப்பிட வசதிகளில் எத்தனை மாற்றங்கள் மனிதன் செய்கிறான். இயற்கைக்கு எதிராக பல வெற்றிகளை மனிதன் அடைகிறான். வெற்றியை மனிதன் அதிகம் நேசிக்கும் பொழுது, இயற்கை நம்மை பழிவாங்கி விடுகிறது. முற்றிலும் மாறுபட்ட எதிர்பாராத விளைவுகள் ஏற்படுகிறது. நம் முன்னோர்கள் எளிமையான குடிசைகளில் வாழ்ந்தாலும் மேடான பகுதிகளில் வாழ்ந்தனர். தற்போது பள்ளங்களில் வீடு கட்டிக் கொண்டும் பொருட்களை இழந்து கண்ணீரில் வாழ்கின்றனர் மக்கள்.

**“ஐப்பசி பிறந்து விட்டால், உங்க வீட்டு மழை எங்க வீட்டு மழை என்று கொட்டோ கொட்டு என்று கொட்டும். பெரிய ஊர் கீழையூர். நான்கு தெருக்கள், ஒவ்வொரு தெருவுக்கும் ஓரத்திலேயே குளங்கள் கொள்ளைக்காடுகளில் ஆங்காங்கே குளம், குட்டைகள் வயற்காட்டிலும் அப்படித்தான் எங்கு பார்த்தாலும் ஏரி, குளம், குட்டை, ஓடை என்றிருக்கும்.**

**ஒவ்வொன்றையும் பெருக்க தனி வாய்க்கால் நீர் நிலைக்கு வரும். ஊர்க்காட்டில் பெய்யும் மழை நீர் அங்குள்ள குளம் குட்டைகளை நிறைத்து விடும். வயற்காட்டில் பெய்யும் மழை, பக்கத்துக்கு ஊர்களில் பெய்யும் மழையையும் கொண்டு ஏரி, குளம், ஓடைகள் நிறைந்துவிடும்”**. (ப- 27- கூத்தாயி)

நீர் நிலைகளில் சேமித்த தண்ணீர் விவசாயத்திற்கும் ஆடு மாடுகளுக்கும் பயன்பட்டது. உழைப்பை நம்பி வாழ்ந்தார்கள். இன்றோ மனித சமுதாயம் உழைக்க அச்சப்படுகிறது. வெயில் வேண்டாம், மண் வேண்டாம், தண்ணீர் வேண்டாம், ஏசி அறையில் வேலை செய்வதை சிறப்பு என்ற எண்ணம் வாழும் வீடும் வேலை செய்யும் இடமும், வேறு வேறு நாடாகியது. வீட்டில் வசிக்கும் பெற்றோரை மகன் பார்த்துக் கொள்ள முடியாமல் அவர்களுக்கு உதவி செய்யவோ பாதுகாக்கவோ முடியாமல் தவிக்கும் அவலம் புறச்சூழல் பாதிப்பாகும்.

**உடை:-**

சமூகத்தில் வளர்ச்சி அடைந்த நிலையில் உடை உள்ளது. எண்ணற்ற வண்ணங்கள் எண்ணற்ற வகைகள் ஆடைகள் நெய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. மக்கள் அவர்கள் விருப்பப்படி அணிந்து கொள்கின்றனர். ஆடைகள் தயாரிப்பில் ஏற்படும் ரசாயன கழிவுகள் மக்களை அச்சுறுத்துகிறது. ஆடம்பரத்தை நோக்கிய பயணம் பாதகமான புறச்சூழலை சந்திக்கிறது.

**“துணி வெளுத்து கொண்டிருந்த வண்ணார பையனுக்கு இவனை தெரியும், ஆனால் இரணியன் என்று தெரியாது”**

**“இரணியன் மளமளவென்று கோமணம் கட்டிக் கொண்டான். துப்பாக்கியை வேட்டியில் சுற்றி துவைக்க இருந்த மூட்டைக்கு கீழே வைத்து விட்டு துணியை துவைக்க ஆரம்பித்தான்”** (ப- 282- மாவீரன் வாட்டாக்குடி இரணியன்)

ஆடைகளை துவைத்து கட்டிக் கொண்டனர். இன்றைய நிலை வீட்டுக்குள் கழிப்பிட வசதி குளியல் அறை துணி துவைக்கும் இயந்திரம் எல்லாம் உள்ளது சமூகம் வசதியான வாழ்க்கை வாழ்கிறது உழைப்பு இல்லாத காரணத்தால் உடம்பில் நோய்கள் ஏற்பட்டு வெற்றி ரத்து செய்து விடுகிறது மருத்துவமனைகளில் நேரத்தை செலவழிக்கின்றான்

மனிதன் உழைக்க மறந்த மனிதனுக்கு நோயும் செலவும் கைகோர்த்துக் கொள்கிறது நேரமும் மருத்துவமனைகளில் முடிந்து விடுகிறது மருத்துவர்கள் பரிசோதனைகளை செய்வதற்கே முழு நாளும் முடிந்து விடுகிறது அடுத்த நாள் மருந்து தரும் அவல நிலையும் உள்ளது உழைக்க மறந்தான் உயிரை மறந்தான் மனித சமுதாயம் இப்படிப்பட்ட நெருக்கடியை சந்திக்கிறது

**உணவு:-**

உணவே மருந்து என்று வாழ்ந்தான் தமிழன். “**கந்தையானாலும் கசக்கிக்கட்டு கூழானாலும் குளித்துக் குடி”** என்ற பழமொழி படி வாழ்ந்தனர். சமூகத்தின் இன்றைய நிலை தரம் தாழ்ந்து விட்டது. முன்னோர் வாழ்க்கையில் இயற்கை மருத்துவம் மகத்தானது இலைகளை கொண்டு மருத்துவம் பார்த்தனர், நோய் குணமாகிவிட்டது. தற்போது உள்ள உணவுப் பழக்க வழக்கங்கள் நோயை உண்டாக்குகிறது.

அதிக எண்ணெய், உப்பு, செயற்கையான நிறமூட்டிகள், சுவையூட்டிகள், பதப்படுத்தப்பட்ட சீஸ், பாலாடை, ரசாயனம் கலக்கப்பட்ட ஜாஸ், அஜினமோட்டோ போன்ற செயற்கை சுவை செரியூட்டிகள், பேக்கிங் சோடா போன்றவை அதிகம் சேர்க்கப்படுவதால் உடல் கோளாறு ஏற்படுகிறது.

நம் உடல் நம் நாட்டு சீதோசன நிலைக்கு உண்டான உணவுகளை உண்பதில்லை. பன்னாட்டு வணிகம் நம் பழக்க உணவுகளில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. துரித உணவுகள் நிச்சயம் வெகு சீக்கிரத்தில் உடலில் சமமின்மையை ஏற்படுத்துகிறது.

இதனால் ஆரோக்கியம் கெடுகிறது. நாளடைவில் சர்க்கரை, ஆஸ்துமா, இரத்தக்குழாய் அடைப்பு, மாரடைப்பு, பக்கவாதம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

“**அப்பாயி பறித்துக் கொண்டு வந்தவற்றில் தூதுவளை, நல்ல வேளே , முசுமுசுக்கை, வாதா மடக்கி, ஆதண்டை, பெருமருந்து இலை, பிரண்டை கொழுந்து, நொச்சிக் கொழுந்து, சங்கு இலை, அவுரி இலை, மூக்கிரட்டைஇலை, முடக்கத்தான், நுனாங்கொழுந்து, வேப்பங்கொழுந்து, முருங்கைக் கொழுந்து, கீழாநெல்லி, கொடிவேலி இலை முதலிய பச்சிலைகள் கிடந்தன.**”

**எல்லாவற்றையும் கொஞ்சம் எண்ணெய் விட்டு வதக்க சொன்னாள். அம்மியில் வைத்து அரைத்தாள். கை கொள்ளாத அளவிற்கு பெரிய உருண்டையாக உருட்டி எடுத்தாள்.**

**மாங்கொட்டை, கத்திரி வத்தல்களைச் சுடு தண்ணீரில் போட்டு கழுவிக் குழம்பு கூட்டி கொதிக்க வைத்தாள் பச்சிலை வாடை உடன் குழம்பு கமகமத்தது. தாளித்தால் பச்சிலையின் பலன் போய்விடும். என்று அப்பாயி சொன்னாள். செல்வி குழம்பை இறக்கி வைத்தாள்.** ” (ப-259- பயிர் முகங்கள்)

குழம்பு நம் முன்னோர்கள் இப்படி வைத்து சாப்பிட்டனர். உடல் கோளாறு ஏற்படவில்லை. உடம்பில் இருந்த நோய்கள் நீங்கின. இன்றைய மனிதர்கள் நாகரீக மாற்றத்தால் அதிக துன்பம் அடைகின்றனர்.

தனது வாழ்வின் அடிப்படையான தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள அவசரமான ஒரு வழியை தேடினான். துணி துவைப்பது, சமையல் செய்வது எல்லாவற்றிற்கும் மெஷினை கண்டுபிடித்த மனிதன், தனது வேலை இலகுவாக்க வெளியில் அதிகமாக உணவை நுகர்வது இது அதிகமான நோயை உருவாக்கும் முன்னோர்கள் காட்டிய வழியே சிறப்பானது.

**சுற்றுச்சூழல்:-**

எங்கும் பசுமை
கண்பட்ட இடமெல்லாம்
தண்ணீர் தென்பட்டது
மண் குடிசை வீடு
பனை ஓலை கூரை
காசுக்கு பஞ்சம் உண்டு
காற்றுக்கு பஞ்சமில்லை
குளிர் மெய் அரங்கம் இல்லை
தவணை முறை திட்டம் இல்லை
தனியார் கடன் வசதி இல்லை
மன அழுத்தம் ஏதுமில்லை
தளர்ந்த வயதிலும்
தள்ளாடிய நிலையிலும்
தாங்கிப் பிடிக்க
தடியுண்டு……
மூலிகை மருந்தின் மகத்துவம் உண்டு
மாத்திரை வாங்க
வரிசையில் நின்ற அவலம்
மயங்கி விழுந்து உயிர் போகும் துயரம் இன்று
உணவே மருந்து அன்று
மருந்தே உணவு இன்று
உணவு பண்டங்களால் உயிர் சேதம் ஏதுமில்லை அன்று
உணவிலும் விஷம் உண்டு இன்று
தீதும் நன்றும் பிறர் தர வாரா
தாமே தேடிக் கொள்ளும் தீமை
இதுவே புதுமை

---<u>முனைவர் இரா. கலைச்செல்வி</u>

<u>**முடிவுரை:-**</u>

நீர்நிலைகளை கடவுளாக நினைத்து முன்னோர்கள் வாழ்ந்தனர் . புவியும் மாசடையாமல் பாதுகாத்து நமக்கு ஒப்படைத்து உள்ளனர்.அவர்கள் ஒப்படைத்த பூமியை நாம் மாசமாக்குவது மட்டும் அல்லாமல் தம்மை தாமே அழிவையும் தேடிக் கொள்கிறோம். இயற்கையை மனிதன் அழிக்க முற்படும் போது இழப்புகள் ஈடு செய்ய முடியாதவைகள் ஆகிவிடும் இயற்கையோடு இணைந்த வாழ்வு வாழ வேண்டும். நவீன நாகரிகம் மனிதனை நெருக்கடியில் தள்ளிவிட்டது.

உழைக்க மறந்த மனிதன் ஆபத்தை வாங்குகிறான். ஆடம்பரப் பயணம் பாதகமான சூழ்நிலையை எதிர்கொள்ள வைக்கிறது. எதார்த்தம் என்றும் வெற்றி மனித மனமே!
எதார்த்தத்தை நோக்கி நடைபோடு
வெற்றி கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை தோல்வி வராமல் இருக்க வேண்டும்.

**மேற்கோள் நூல்கள்**

ச.சுபாஷ்சந்திரபோஸ் 1.கூத்தாயி (2012) இயல் பதிப்பகம்

ச.சுபாஷ்சந்திரபோஸ் 2. மாவீரன் வாட்டாக்குடி இரணியன் (1999) இயல் பதிப்பகம்.

ச.சுபாஷ்சந்திரபோஸ் 3. பயிர் முகங்கள் .(2000) இயல் பதிப்பகம்.